சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 12.01.2026
வா.சா.1 –செல்லக்கண்ணு என்ற கண்ணன் S/o.சின்னச்சாமி
O.S. No.371/2022
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

இன்றைக்கு நீதிமன்றத்திற்கு 2ம் பிரதிவாதி ராஜாங்கம் வந்துள்ளார் என்றால் சரிதான். என் உடன்பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து 5 ஆண்மகன்கள், ஒரு பெண் இருக்கிறார்கள். மாணிக்கம், அய்யங்காளை, கருப்பணன், மூக்கம்மாள், குமாரலிங்கம் மற்றும் நான் ஆகியோர் என் பெற்றோர்களுக்கு வாரிசுகள் ஆவோம். 1 முதல் 4 பிரதிவாதிகள் என்னுடைய அண்ணன் மாணிக்கம் என்பவருடைய வாரிசுகள் என்றால் சரிதான். 5 முதல் 9 பிரதிவாதிகள் அய்யங்கங்காளை என்னுயை அண்ணன் வாரிசுகள் என்றால் சரிதான். 10 முதல் 13 பிரதிவாதிகளான பனையம்மாள், மலைச்சாமி, சுப்பையா ராஜேந்திரன் ஆகியோர் என்னுயைட மற்றொரு அண்ணன் கருப்பணின் வாரிசுகள் என்றால் சரிதான்.14ம் பிரதிவாதியான குமரன் என்ற குமாரலிங்கம் என்பவர் என் உடன்பிறந்த அண்ணன் ஆவார். 15ம் பிரதிவாதியான மூக்கம்மாள் என் உடன்பிறந்த சகோதரி. வழக்கு சொத்து என் அப்பா சின்னசாமியுடைய தனிப்பட்ட சொத்துக்களும், பூர்விக சொத்துக்களும் உள்ளடங்கும். என்னுயைட வழக்கு சொத்தானது கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து என் அண்ணனான அய்யங்காளை மற்றும் கருப்பணன் ஆகியோ் பெயரில் வாங்கிய கூட்டுக்குடும்ப சொத்துக்கள் ஆகும். வழக்கு சொத்து கூட்டுப்பட்டா என் பெயரிலும், பிரதிவாதிகள் பெயரிலும் இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் 1/6 பாகமும், 1முதல் 4 பிரதிவாதிகளுக்கு என் அண்ணன் மாணிக்கத்தின் பங்கான 1/4பங்கு உண்டு என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் பொதுவாக அனுபவத்தில் இருந்து வருகிறது. வழக்கு 9வது இனசொத்தில்

5 வீடுகள் உள்ளன. அதில் 3 ஓட்டுவீடும், 2 சென்ட்ரிங் வீடும் உள்ளன. வழக்கு 9வது இன சொத்தில் என் அண்ணன் மாணிக்கத்தின் வாரிசுகள், அய்யங்காளை வாரிசுகள், கருப்பணன் வாரிசுகள், நானும் குடியிருந்து வருகிறோம். 1991ம் ஆண்டே வாய்மொழியாக அவரவர் பாகங்களை பிரித்து கொண்டோம், ஆனால் அது பதியவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்தோம். B அட்டவணை சொத்தான சர்வே நம்பர் 372/14A மற்றும் 14B யை பொறுத்து என் அண்ணன்களான கருப்பணன் மற்றும் அய்யங்காளை என்பவர்கள் பாகம் கொடுக்காமலேயே பத்திரம் பதிந்து கொண்டார்கள். அதற்காக தான் தற்போது வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். மேலும் அவர்கள் 5,6,7 மற்றும் 9ம் பிரதிவாதிகள் 8ம் பிரதிவாதியான சுப்பையா பெயரில் கிரைய பத்திரம் சர்வே நம்பர் 372/14A மற்றும் 14B பொறுத்து பத்திரம் எழுதி கொடுத்ததை ரத்து செய்யவேணண்டும் என்றும், அதேபோல 10ம் பிரதிவாதி, 11ம் பிரதிரவாதியான மலைச்சாமிக்கும் கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். அதை ரத்து செய்யவேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் வெளிநாட்டில் டிரைவராக பணியாற்றி வேறு பல சொத்துக்களை கிரையம் முடித்துள்ளேன். அதற்கும் வழக்கு சொத்துக்கும் சம்பந்தம் இல்லை. எதிர்கோரிக்கை பரிகாரம் கேட்டுள்ள வழக்கில் C அட்டவணை சொத்து 1வது இனம் சர்வே நம்பர் 530/2 ல் 2ம் பிரதிவாதியிடம் இருந்து எனது மனைவியான விஜயலதா பெயரில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்து 2ம் பிரதிவாதி ராஜாங்கத்தின் சுயசம்பாத்திய சொத்து என்றால் சரிதான். அதேபோல் எதிர்கோரிக்கை வழக்கில் C அட்டவணை சொத்து 2ம் இனம் சர்வே நம்பர் 154/1ல் உள்ள சொத்தானது, என்னுயைட தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தில் கட்டிடம் கட்டி வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கில் C அட்டவணை சொத்தில் 3ம் இலக்க சொத்து 2ம் பிரதிவாதியின் சுயசம்பாத்திய சொத்து என்றும், அதில் அவர் வீடு கட்டி கடையை

வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொத்தானது, கடன் வாங்கி கட்டிய சொத்து ஆகும். அதில் வாடகையை 5 முதல் 9 பிரதிவாதிகள் அவர்களோடு பங்கிட்டு கொண்டது கிடையாது. ஆகையால் வழக்கில் C அட்டவணை சொத்து எதிர்கோரிக்கை வழக்கை பொறுத்து நான் பாகம் எதுவும் கோரவில்லை. வழக்கு A மற்றும் B அட்டவணை சொத்தை பொறுத்து 1/6 பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான்.

5 முதல் 9ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-

நான் வெளிநாட்டில் இருந்து சம்பாதித்தேன் என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வெளிநாட்டில் இருந்து வேலை செய்து என் மனைவி, மக்களுக்கோ, அல்லது என் அப்பா, கர்த்தாவாக செயல்பட்டதாக சொல்லப்படும நபருக்கோ பணம் அனுப்பியிருக்கிறேனா என்றால் கருப்பணன் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறேன். பணம் அனுப்பியதற்கான ஆவணம் இருக்கிறதா என்றால் முடியாது. என்னுடன் வந்திருக்கும் நபர் 2ம் பிரதிவாதி ராஜாங்கம் ஆவார். இந்த வழக்கின் பிரதிவாதிகள் என்ன ஆட்சேபணை வழக்கிற்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்திருக்கும் வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு முன்பாக என்ன ஆட்சேபணை பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களை ஆட்சேபித்து முதல் விசாரணை வாக்குமூலத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். எனக்கு படிக்கத் தெரியாது. முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, என்னுடைய வழக்குரையிலோ என்ன விபரம் எழுதப்பட்டிருக்கிறது என்ற விபரம் தெரியாது என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் வழக்கு சொத்தை பொறுத்து

பிரதிவாதிகள் சொன்ன ஆட்சேபணையை மறுத்தோ, C அட்டவணை சொத்தை பொறுத்தோ நான் எந்த விதமான விபரங்களையோ முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியிருக்கிறேன். 5 முதல் 9 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விபரங்களை C அட்டவணை சொத்தை பொறுத்த எதிர்கோரிக்கை வழக்கை பொறுத்தும், எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் எந்த ஒரு விபரத்தையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக சொல்லியதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.15 பதில் அறிவிப்பில் 14 இலக்க சொத்துக்களை பொறுத்து மட்டுமே கூட்டுக்குடும்ப சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை மறைத்து, என் முதல் விசாரணை வாக்குமூலத்திலும், வழக்குரையிலும் அனைத்து சொத்துக்களுமே பொது குடும்ப சொத்துக்கள் என்று பிரதிவாதிகள் ஒப்புகொண்டதாக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

(5 முதல் 9பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.01.12 21:21:19 +0530

Sub Judge

Melur